**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.**

**அசல் வழக்கு எண். 168/2019**

பெயர் : ஜானகி D.W.1. Cross

க/பெ. : கணேசன்

தேதி : 22.09.2025

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை: –**

1. 1ம் பிரதிவாதி ராஜாராமன் எனது கொழுந்தனார் ஆவார். 2ம் பிரதிவாதி செந்தில் 1ம் பிரதிவாதியின் மகன் ஆவார். எனது கணவர் கணேசனும் வாதியின் தகப்பனார் கோவிந்தசாமியும் சகோதரர்கள் என்றால் சரிதான். வாதி என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். எத்தனை அயிட்ட சொத்துகளுக்கு வாதி வழகது தாக்கல் செய்துள்ளார் என்றால் 2 அயிட்ட சொத்துகளுக்கு தாக்கல் செய்துள்ளார். முதல் அயிட்ட சொத்தானது புல எண். 432/11 , விஸ்தீரணம் 254 சதுர மீட்டர் என்றால் சரிதான். அதில் வீடு உள்ளது. அந்த வீட்டில் வாதி குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான்.

2. பிவாசாஆ 2 ஆன ஆவணமானது வாதியின் தகப்பனார் கோவிந்தசாமி எனது கணவர் கணேசனுக்கு புல எண். 408/3 ல் 10 செண்ட் மனையை இனாம் சாசனமாக கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த சமயத்தில் எனக்கு திருமணம் ஆகிவிட்டதா என்றால் ஆகிவிட்டது. அப்போது எனது மாமனார் உயிருடன் இருந்தார். பிவாசாஆ 2 ஆன ஆவணத்தில் நான்கெல்லையில் நான் குடியிருக்கும் மனைக்கு கிழக்கு, பெருமாள் கோவில் 2ம் தெருவிற்கு தெற்கு என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3. பிவாசாஆ 2ன் மூலம் புல எண். 432/4G கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான். புல எண்.408/3 ஆனது திருக்கடையூர் அமிர்தகடேஸ்வரர் கோவிலுக்கு சொந்தமானது என்றால் சரிதான். கோவிலுக்கு நாங்கள் பகுதி செலுத்தியதற்கான ரசீது தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எவ்வளவு காலமாக பகுதி செலுத்தி வருகிறோம் என்றால் பல காலமாக செலுத்தி வருகிறோம். எவ்வளவு வருடம் என்று குறிப்பிட்டு கூறஇயலாது. யார் பெயரில் பகுதி செலுத்தி வந்தோம் என்றால் எனது கணவர் கணேசன் பெயரில் செலுத்தி வந்தோம்.

4. நான் மேற்படி திருகோவிலுக்கு பகுதி செலுத்தவில்லை என்றாலும், எந்த பகுதி ரசீதுகளும் நான் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. வாதி செல்வி

நான் குடியிருக்கும் வீட்டிற்கு மேல்புரம் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். எனது வீடு எவ்வளவு அடி அகலம் மற்றும் நீளம் இருக்கும் என்றால் என்னால் குறிப்பிட்டு கூற இயலாது. தோராயமாகவும் தெரியாது. வாதியின் வீடு எவ்வளவு அடி அகலம் மற்றும் நீளம் இருக்கும் என்றால் என்னால் குறிப்பிட்டு கூற இயலாது.

5. நாங்கள் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையில் உள்ள விபரங்களை யார் வழக்கறிஞரிடம் கூறினார்கள் என்றால் நானும் மற்ற பிரதிவாதிகளும் தான் சொன்னோம். இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்போ அல்லது தாக்கல் செய்யும் போதோ எனது சொத்து அளவீடு செய்யப்பட்டதா என்றால் இல்லை. வாதி அவரது சொத்தைஅளவீடு செய்தாரா என்றால் இல்லை. எனது நிருபண வாக்குமூலத்திலும் எதிர் வழக்குரையிலும் புல எண். 432/4G என்பது தவறு என குறிப்பிட்டுள்ளேன் என்றால் இல்லை. மேற்கண்ட புல எண்ணிற்கு வாதி வாசாஆ 2 ஆன ஆவணம் தாக்கல் செய்துள்ளார் என்றால் அது போலியான ஆவணமாகும். அந்த ஆவணத்தை நான் பார்த்தேனா என்றால் இல்லை. அந்த ஆவணத்தை வழக்கறிஞர் என்னிடம் காண்பித்தாரா என்றால் இல்லை. அந்த ஆவணத்தை பார்க்காமலேயே போலியானது என்று சொல்கிறேன் என்றால் சரிதான்.

6. வாதி தாவா சொத்திற்காக கோவிலுக்கு பகுதி செலுத்தியுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பகுதி செலுத்தியதற்கான ஆவணங்களை வாதி தாக்கல் செய்துள்ள விபரத்தை தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. தாவா 2 வது அயிட்ட சொத்தை பொறுத்து எனக்கும் வாதிக்கும் எப்போது பிரச்சனை ஏற்பட்டது என்றால் 2016 ம் ஆண்டு ஏற்பட்டது. அப்போது காவல் துறையில் புகார் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். அதற்கு கட்டுப்படாமல் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். காவல் துறையில் புகார் கொடுத்தற்கான புகார் மனு அல்லது மனு ரசீதை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் சொல்வது போல் நான் வாதிக்கு எதிராக எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்துகள் வாதியின் அனுபவத்தில் உள்ளது என்றால் சரியல்ல.

7. வாதி குடியிருந்து வரும் 1 வது அயிட்ட சொத்திற்கு பின்புறம் தான் தாவா 2 வது அயிட்ட சொத்து உள்ளது என்றால் சரிதான். புல எண் 408/3 ற்கான பகுதியை எனது பெயரில் மாற்றவில்லை என்றால் சரிதான். வழக்கு முடிந்த பிறகு மாற்றி தருவதாக கோவில் நிர்வாகத்தினர் கூறியுள்ளார்கள். பகுதி மாற்றித்தரக்கோரி மேற்படி கோவிலுக்கு மனு கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. வாதி வீட்டிற்கு பின்புறம் ராமலிங்கம் என்பவருக்கு சொந்தமான சொத்து உள்ளதா என்றால் உள்ளது. எனது

இடத்திற்கு பக்கத்தில் உள்ளது. வாதி வீட்டிற்கு மேற்கில் இந்திராணி வீடு உள்ளது என்றால் சரிதான்.

8. வாதியின் தாயார் பார்வதியை நான் பார்த்துள்ளேன் என்றால் பார்த்துள்ளேன். எனக்கும் அவருக்கும் விரோதம் இருந்ததா என்றால் இல்லை. எவ்வளவு நாட்களாக எனக்கு பார்வதியை தெரியும் என்றால் எனக்கு திருமணம் ஆன நாள் முதல் தெரியும். பார்வதிக்கு எழுத படிக்க தெரியாது என்றால் சரிதான். பார்வதி எப்போது இறந்தார் என்று எனக்கு தெரியாது. தாவா சொத்துகளில் எனக்கு எவ்வித உரிமையும் அனுபவமும் இல்லை என்றால் சரியல்ல. வாதியின் சொத்தை நான் அபகரிக்க முயற்சி செய்கிறேன் என்றால் சரியல்ல. நான் எனது எதிர் வழக்குரை, மற்றும் நிருபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் உண்மை அல்ல என்றால் சரியல்ல.